RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# குறள் காட்டும் அகக்கோட்பாட்டு மெய்யியல்

**அ. பரணிராணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை - 625019, தமிழ்நாடு, இந்தியா

# The Philosophy of Inner Life in the Thirukkural

**A. Paranirani** [a, *]

[a] Department of Tamil, N.M.S.S. Vellaichswamy Nadar College, Nagamalai, Madurai - 625019, Tamil Nadu, India

* Corresponding Author: maheshparani@gmail.com

**ABSTRACT**

Philosophy is a dynamic field that evolves across different periods in response to changes in human knowledge and scientific development. The Thirukkural advocates a practical philosophy of life that guides individuals toward inner development and enables them to experience a meaningful and harmonious life in this world. Thiruvalluvar identifies universal truths embedded in both the inner and outer dimensions of human existence and articulates philosophical principles based on these insights in the Thirukkural, one of the great works of Tamil literature. The Thirukkural contains numerous philosophical ideas that contribute to an understanding of human life. In particular, the Inbathuppāl (Book of Love) presents a philosophy of lived experience based on the akam (inner-life) principles associated with Tolkāppiyam. Thiruvalluvar discusses Kalaviyal (premarital/secret love) in seven chapters and Karpiyal (marital love) in eighteen chapters. Although the Inbathuppāl is distinguished by its imaginative richness and literary beauty, it also presents a profound philosophy of life through a dramatic and psychologically nuanced portrayal of human relationships. The akam tradition is broadly organized into two stages: kalavu and karpu. Within the Kalaviyal framework, themes such as natural union, subsequent meetings, the involvement of companions, secret meeting places, temporary separation, delays in marriage arrangements, ethical conduct, separation during negotiations, and union through elopement are represented. The Karpiyal section explores themes including separation involving another woman, separation for material purposes, and other dimensions of married life. Through these stages and situations, Thiruvalluvar delicately portrays the inner emotional world of lovers, including love, longing, separation, expectation, anxiety, reconciliation, and emotional attachment. In doing so, the Thirukkural presents love not merely as a personal emotion but as an experience governed by ethical values and human dignity. Tamil literary tradition, particularly the Thirukkural, presents love as an ethical and human value with universal significance. Thiruvalluvar's treatment of love transcends narrow social and cultural boundaries and reflects a broader humanistic vision. This article therefore aims to examine Valluvar's philosophy of love (kādhal aṟam) through the framework of ethical philosophy, with particular emphasis on the relationship between akam theory, emotional experience, love, and ethical living in the Inbathuppāl.

**Keywords:** Field Science, Left-Handedness, Internalism, Love, Pangalakutam

## முன்னுரை

மெய்யியல் பேறறிவு சார்ந்த ஒன்று என்றால் இலக்கியம் பேருணர்வு சார்ந்த ஒன்றாகும். இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை. தமிழர்களின் அகச்சிறந்த நூல்களான

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் தமிழரின் மெய்யியலைக் காணலாம். மெய்யியலை ஆழமாக, விரிவாக, விளக்கமாகச் சொல்லக் கூடிய பேரிலக்கியம் திருக்குறள். தமிழரின் அகம்சார்ந்த மெய்யியலை அவர்களின் வாழ்விலிருந்து உய்த்தறிய பெருத்துணையாக நிற்பது திருக்குறளே. இன்பத்துப்பாலை களவு, கற்பு என அகத்துறை வரிசை முறையில் அமைத்து தமிழரின் அகம் சார்ந்த மெய்யியலை நாடகப் பாங்கோடு காட்சிப்படுத்தி இலக்கியப் பேரின்பத்தை நல்கியவர் வள்ளுவர்.

## இயற்கைப் புணர்ச்சி

தலைவன் தன் மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன் தன் காதலை உணர்த்த துணிவான். தலைவியும் தன் காதற் குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலே உணர்த்துவாள். தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே தலைவன் தலைவியை தனிமையில் சென்றடைந்து ஒன்று கூடி இன்புறுவான். தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை இயற்கைப் புணர்ச்சி என்பர்.

திருக்குறளில் காணப்படும் இயற்கைப் புணர்ச்சி பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தலைவியை நலம் பாராட்டுவதாக அமைந்துள்ளது.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்

நோக்கம்இம் மூன்றும் உடைத்து. (திரு.1085)

தலைவன் பார்வை என்னை கொல்வது போல வருத்துவதால் கூற்றமோ? இடையிடையே மருண்டு பார்ப்பதால் பெண்மானோ? இயல்பான மானுடக் கண்தானோ? இப்பெண்ணின் பார்வை இம்மூவகைத் தன்மையும் கொண்டதாயிருக்கிறது. தலைவியின் கண்கள் இன்பமும் துன்பமும் ஒருங்கே விளைவிக்கின்றனவே எனத் தலைவன் கூறியது.

## இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சி எனப்படுகின்ற இருவரும் கூடி மகிழ்கின்ற நிலையை நாள்தோறும் நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் ஏற்படும். முதல்நாள் சந்தித்த அதே இடத்திற்கு ஒவ்வொரு நாளும் தலைவன் சென்று தலைவியை சந்தித்து மகிழ்வான் இதுவே இடந்தலைபாடு எனப்படும்.

காதலியை முதல்நாள் கூடிப் பிரிந்த தலைவன், மறுநாளும் அவளைக் காணச் சென்றான். முதல் நாள் சந்தித்த இடத்திலேயே அவளும் வந்து நின்றிருந்தாள், அவளைக் கண்டதும் மகிழ்ச்சியால் தலைவன் தன் நெஞ்சிற்கு கூறியது.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்

பலர்காணும் பூவொக்கும் என்று (திரு.1112)

என் நெஞ்சமே! நான் காணும் தலைவியின் கண் பலராலும் காணப்படும் மலர்க்கு ஒப்பாய் இருக்கிறது என்று கருதி, நீ மலரை கண்டபொழுது இவள் கண்ணோ என்று மயங்குகிறாய். மலர்களை விட தலைவியின் கண்கள் சிறந்தன எனக் கூறுகிறான். திருக்குறளில், இடந்தலைப்பாடு துறையில் அமைந்த பாடல்களில் தலைவன் தலைவியை சந்திக்கும் போது, தன் காதல் நோயை நெஞ்சிற்கும், கண்ணிற்கும் கூறுவதாய் அமைந்துள்ளது.

## பாங்கற் கூட்டம்

தலைவன் தலைவி மீது கொண்ட காதல் மிகுதியை கண்டு, தலைவி இருக்கும் இடத்தை பாங்கன் கேட்டறிவான். பின்னர் தலைவன் குறிப்பிட்ட தலைவியை கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான், தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான். தலைவனை தலைவி இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தை பாங்கன் காட்ட தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது ~பாங்கற் கூட்டம்| எனப்படும்.

இயற்கை புணர்ச்சி நிகழ்;ந்த மூன்றாம் நாள் தலைவி இருக்கும் இடத்தைத் தலைவன், தோழன் வாயிலாய் அறிந்து சென்று கூடுவதாகும். அவ்வாறு கூடிய தலைவன், தலைவி பற்றிச் சொல்லியது.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்

தீயாண்டுப் பெற்றாள் இவள். (திரு-1104)

இவள், தன்னை விட்டு அகன்றால் சுடுவதும், நெருங்கினால் குளிர்ச்சி தருவதுமான புதுமைத் தீயை எங்கிருந்து பெற்றனளோ? தொட்டால் குளிர்ச்சி தருவதும், விட்டால் சுடுவதுமான தீயாயத் தலைவி இருக்கிறாள் எனத் தலைவன் பாங்கனிடம் கூறுகிறான்.

## பாங்கியற் கூட்டம்

செவிலித்தாயின் மகள் நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் குறி, அவள் வழிநடத்தும்படி தலைவியைக் கூடிட தலைவன் விரும்புவான். தோழி வழியாக தலைவன் தலைவியைச் சேர்வது பாங்கியற் கூட்டம் எனப்படும்.

தலைவியும் தோழியும் ஓரிடத்தில் இருந்தபோது அங்கு தலைவன் வந்தான். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்கினர். அப்பார்வை கொண்டு தலைவன் தலைவியரிடையே காதல் உண்டு என்பதை ஒருவாறு உய்த்துணர்ந்த தோழி தன்னுள் கூறியது.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல. (திரு.1100)

காதலியின் இரு கண்களும் தம்முள் ஒன்றிணைந்து தங்கள் மன ஒற்றுமையை உணர்த்தி விடும்போது, தம் காதலை அவர்கள் சொற்களால் சொல்ல வேண்டும் என்பதில்லை. கண்கள் ஒன்றுபட்ட பின் வாய்ப்பேச்சுக்கு இடமில்லை என்பதை தோழி உணர்த்துகிறார்.

## குறியிடம்

தலைவனும் தலைவியும் சந்திப்பதற்கேற்ற வகையில், ~இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்| என்று தோழி குறியிடம் கூறுவாள். பகலில் கூடுமிடம் வீட்டிற்கு புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்கு பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும். தலைவியைத் தலைவன் பகலில் கூடுவதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது ~பகற்குறி| எனப்படும். பகற்குறி தலைவியை சந்திக்க வந்த தலைவன். பகற்குறியில் பல இன்னல்களை சந்திப்பான். அந்நிலையில் இரவில் தன்னைச் சந்திக்கவரும் தலைவனிடம் சந்திப்பதற்கு வேண்டிய இடத்தை வரையறுக்கும் இடம் ~இரவுக்குறி| எனப்படும்.

இயற்கையாக ஏற்படும் குறியினை தலைவன் எழுப்பியதாக எண்ணி தலைவி வந்து ஏமாந்து திரும்புவாள். பின் தலைவன் வந்து எழுப்பும் ஒலியை குறியன்று எனக் கருதி வரமாட்டான். இதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இது ~அல்ல குறிபடுதல்| எனப்படும்.

நிலவொளி வீசும் நேரத்தில் இரவுக்குறியிடத்தில் தன் காதலியைக் காண வந்த தலைவன் நிலவை நோக்கி,

மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்

பலர்காணத் தோன்றல் மதி. (திரு.1119)

தன் காதலியின் முக அழகினைத் தான் ஒருவனே கண்டு அனுபவித்தவனாதலால், தலைவன், பலர் காணத் தோன்றும் நிலவினை நோக்கி, மலரினைப் போன்ற கண்களைக் கொண்ட என் தலைவியின் முக அழகினை ஒத்திருக்க விரும்புவாய் என்றால், பலரும் காணும்படியாக தோன்றாதே என இழித்துக் கூறினான். திருக்குறளில் பகற்குறியிலும், அல்லக்குறியிலும் குறியிட அகத்துணை பாடல் இடம்பெறவில்லை. இரவுக்குறியிலும் தலைவன் தலைவியின் முக அகழகை நிலவுடன் ஒப்பிட்டுக் கூறுகிறான்.

## ஒருவழித்தணத்தல்

ஊரார் தூற்றும் அலர் அடங்குமாறு, தலைவன் தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். பின் பகற்குறியிலும், இரவுக் குறியிலும் வருவதை தவிர்ப்பான்;; அதுவே ஒருவழித்தணத்தல் எனப்படும்.

தலைவியைத் தலைவன் சிறிது காலம் பிரிந்திருந்தான். ஒருவேளை, தோழி தன் இயல்பை பழிப்பாளென்று அஞ்சி, தான் இருக்கும் இயல்பைத் தலைவி, தோழி கேட்பத் தன்னுள்ளே கூறியது.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்

எழுதேம் கரப்பாக்கு அறிந்து (திரு.1127)

என் காதலர் எப்பொழுதும் என் கண்ணுக்குள்ளேயே இருக்கிறார். அதனால் கண்ணுக்கு மை தீட்டினால் எங்கே மறைந்து விடுவாரோ எனப் பயந்து கண்ணுக்கு மையும் தீட்டாமலிருக்கிறேன். திருக்குறளில், ஒருவழி தணத்தல் துறையில் அமைந்த பாடல்கள் தலைவி தோழியிடம் கூறும் கூற்றாகவே அமைந்துள்ளன.

## வரைவு நீட்டிப்பு

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த தலைவன் மணம் செய்துகொள்ளக் காலம் நீட்டித்தது.

தலைவன் களவொழுக்கத்தையே விரும்பி வரைவு மேற்கொள்ள முயலாதவனாய் இருந்தான். அவன் சிறைப்புறத்தானாய் இருப்பதை அறிந்த தோழி, ~தலைவனொடு நீ கொண்டுள்ள காதலால் ஊரார் பழிச்சொல் பேசுகின்றனர். அன்னை கடுஞ்சொல் கூறுகிறாள். ஆதலால், நீ உன் காதல் வெளிப்படாதவாறு காத்திருத்தல் வேண்டும் என்று தலைவியிடம் தலைவன் கேட்டறியும் வகையில் கூறினாள்.

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்

நீர்ரா நீளும்இந் நோய் (திரு.114)

ஊராரின் பழிச்சொல் எருவாகவும், அது கேட்டு அன்னை கூறும் கடுஞ்சொற்கள் நீராகவும் பயன்பட்டுத் தலைவியின் காம நோயாகிய பயிர் செழித்து வளர்கிறது. அலர் ஏற்படா வண்ணம் காத்திக்குமாறு கூறுகிறாள் தோழி.

## வரைவு கடாயது

தலைவிக்கு அலர் ஏற்படுவதாலும், தலைவி இற்செறிக்கப் பட்டிருப்பதாலும், அயலவர் மணம்பேசி வருவதாலும், இனி களவு வாழ்க்கை நீடிக்க முடியாத சூழ்நிலையில் தலைவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என நேரடியாகவோ, மறைமுகமாகவோ தோழியும், தலைவியும் வற்புறுத்திக் தலைவனிடம் கூறுவர். இதுவே வரைவு கடாதல் எனப்படும்.

இரவில் அல்லகுறிப்பிட்ட தலைவன் தலைவியைக் காண இயலாது திரும்பினான். மறுநாள் தலைவனைக் கண்ட தோழி, ஊரார் அலர் தூற்றுவதைச் சொல்லி, அவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்று கூறியபோது தலைவன் அவளிடம் கூறியது.

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்

பலரறியார் பாக்கியத் தால் (1141)

எங்கள் இருவரின் காதலொழுக்கம்பற்றி ஊரார் பழிதூற்றிப் பேசுகின்ற காரணத்தால்தான், என் உயிர் நிலை பெற்றிருக்கிறது. இஃது என் நல்வினைப் பயன் என்னும் உண்மையைப் பழி தூற்றுகின்ற பலரும் அறியார். திருக்குறளில் வரைவுகடாயது துறையில் அமைந்த பாடல்கள் தோழி தலைவனிடம் தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்க, அதற்கு தலைவன் தோழியிடம் கூறும் கூற்றாகவே அமைந்துள்ளது.

## வரைவிடைப்பிரிவு

பெற்றோர் வரைவுக்கு உடன்படுவராயின், மகட்கொடையாகவும், மன நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். அப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது ~வரை விடைப்பிரிவு எனப்படும்.

தலைவன் திருமணத்திற்காகப் பொருள் ஈட்டி வரப் பிரிந்து சென்றிருந்தான். தலைவி அவன் பிரிவை ஆற்றாது வருந்தியிருந்தான். அவளைத் தேற்றுதற் பொருட்டுத் தோழி, தலைவன் தலைவியைத் தவிக்கவிட்டுப் பிரிந்துவிட்டான்| என அவன் இயல்பைப் பழித்துக் கூற, அது கேட்ட தலைவி, தலைவன் இனிய இயல்பினை எடுத்து கூறியது.

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்

ஏதிலர் என்னும்இவ் வூர் (திரு.1130)

என் தலைவன் எப்போதும் என் உள்ளத்தினுள்ளே மகிழ்ச்சியோடு வாழ்;ந்து கொண்டிருக்கிறார். இதை அறியாத இவ்வூர் மக்கள், ~இவளைப் பிரிந்து வாழும் அவர் அன்பில்லாத அயலவர்| என்று அவரைப் பழிதூற்றுகின்றனர். தோழியே! நீ பழித்துரைப்பது தகாது, ஊரார் அறியாதவரென்றால், நீயுமா உண்மையை அறியவில்லை.

## அறத்தோடு நிற்றல்

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவை பொறுக்க இயலாது உடல் மெலிவாள். இந்நிலையில் செவித்தாய் தோழியிடம் தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது? என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் தலைவியின் களவு வாழ்க்கை எடுத்துரைப்பாள். தலைவி தோழியிடமும், தோழி தன் தாயாகிய செவிலியிடமும், செவிலி தலைவியின் தாயாகிய நற்றாயிடமும், நற்றாய் தலைவியின் தந்தைக்கும் தமையன்மார்க்கும் அறத்தொடு நிற்பாள்.

செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றமையை அறியாத தலைவியிடம், தோழி, நான் என்ன கூறிச் செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்பது? எனச் சிரித்தவாறு கேட்டாள், அது கேட்ட தலைவி அவள்மீது வருத்தம் கொண்டு தன்னுள்ளே சொல்லியது.

யாங்கண்ணின் காண நகுப; அறிவில்லார்

யாம்பட்ட தாம்படா ஆறு (திரு.1140)

காதல் நோயினால் நான் படும் துன்பங்களைத் தாம் பட்டு அறியாத காரணத்தால் அறிவில்லாதவர், நான் கண்ணால் காண என்னை ஏளனம் செய்து சிரிக்கின்றனர் எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

## உடன்போக்கு

தலைவியின் களவு வாழ்க்கையை அறிந்த பெற்றோர் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். இந்நிலையில் தலைவியின் துன்பம் அறிந்த தோழி தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவறுமறியாதவாறு தலைவியை தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். தலைவனுடன் தலைவி உடன் செல்லுதல் ~உடன் போக்கு| என வழங்கப்பெறும்.

தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லுமாறு தோழி தலைவனிடம் கூறினாள். தலைவியின் மென்மையான அடியினால் காட்டில் நடந்துவர இயலாது என்று கூறித் தோழி சொல்லியதைத் தலைவன் மறுத்துரைத்து,

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெஞ்சிப் பழம். (திரு.1120)

அனிச்சம்பூவும் அன்னத்தின் தூவியும் இப்பெண்ணின் அடிகளுக்கு நெருஞ்சி முள்ளைப் போல வருத்தம் கொடுக்கும் எனத் தலைவன் தலைவியின் காலடிச் சிறப்பைத் எடுத்துரைக்கிறான்.

## மங்கல மனையறம்

களவு நீங்கிக் கடிமணம் புரிந்துகொண்ட தலைவனும் தலைவியும் இனிய இல்லறம் நடத்துதல்.

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும் நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்? என நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

'தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்

காமம் நிறைய வரின்" (திரு-1282)

பனை அளவாக காதல் பெருகிடும்போது தினை அளவுகூட ஊடல் கொள்ளாமல் இருக்க வேண்டும் என தான் ஊடல் கொள்ளாமைக்கு காரணம் கூறுகிறாள் தலைவி.

## பொருள்வயிற் பரிவு

பொருள்தேடி செல்லக் கருதும் தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தலைவியை தேற்றுவித்துத் தோழி தலைவிக்கு துணை நிற்பாள்.

தலைவன் பொருள் தேட செல்ல நினைக்கிறான். தலைவன் மனம் ஏற்கவில்லை பிரிவாற்றாமையில் தலைவி கூறியது.

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்

வல்வரவு வாழ்வார்க் உரை" (திரு.1151)

பிரிந்து செல்லாத நிலைமை இருந்தால் எனக்கு சொல், பிரிந்து சென்று விரைந்து வருதலைப் பற்றியானால் அதுவரையில் உயிர்வாழ வல்லவர்க்குச் சொல். தலைவி பிரிவாற்றமையால் தலைவி தலைவனிடம் கூறி தன் அன்பை வெளிப்படுத்துகிறாள்.

## முடிவுரை

தமிழர் மெய்யியலை அவர்களின் வாழ்வியலையும், வரலாற்றையும் நோக்கியே புரிந்து கொள்ள முடியும். அதன் அடிப்படையில் வள்ளுவர் அருளிய இன்பத்துப்பால் அகம் சார்ந்த பழந்தமிழரின் வாழ்வியல் மெய்யியலை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. காதலைக் கூட அறமாக கொண்டாடியது தமிழிலக்கியம். தமிழ்க்காதல் உலகப்பொதுநோக்கை அடிப்படையாக கொண்டது என்பதை மெய்யியல் வழி அறியலாம். மனிதனின் அகவாழ்வியல் இருக்கும். பொதுவான உண்மைகளை கண்டறிந்து அவற்றுக்கான கோட்பாடுகளை வள்ளுவர் உருவாக்கியுள்ளார்.

## References


ஆனந்தம், கு.ச. (1986) வள்ளுவரின் மெய்யியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

எம். சிவசுப்பிரமணியன், (2013) திருக்குறள் தெளிவுரை, commercial Publication

சங்க இலக்கிய மெய்யியல், கோவைவாணன், நீயூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

சண்முகப்பிள்ளை, மு. (1980) அகப்பொருள் மரபும் திருக்குறளும், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

சிலம்பொலி சு.செல்லப்பன், (2017) செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம், பழினிப்பா பிரதர்ஸ்

சுந்தரம் சண்முகனார், (2003) வள்ளுவர் இல்லம், புதுவைப் பைந்தமிழ் பதிப்பகம்.

வித்யா கோமதி, ச. (2014) மெய்யியலும், தமிழர் கண்ட அறிவுசார் நுட்பவியல், பிரணவ் தமிழியியல் ஆய்விதழ்,



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License